பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத வருட தை மீ 07 உ ஞாயிற்றுக்கிழமை (20-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 54

# ஈராக் மீது பதிலடி இஸ்ரேல் நடத்தும்

## மீண்டும் ஏவுகணை தாக்குதலுக்கு டெல்அவிவ் இலக்கானதன் எதிரொலி

லண்டன், ஜனவரி 20

இஸ்ரவேலின் தலைநகர் டெல்அவிவ் மீது ஈராக் நேற்று இரண்டாவது தடவையாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

இதனை அடுத்து ஈராக்கிற்கு பதிலடி கொடுப்பது தவிர்க்கமுடியாதது என்று இஸ்ரவேல் அறிவித்திருக்கிறது.

இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 10-30 மணியளவில் 5 நிமிட இடைவெளியில் பதினொரு ஏவுகணைகள் தலைநகர் டெல்அவிவிலும் ஏனைய பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

அந்த ஏவுகணைகளில் இரசாயனக் கலவைக் குண்டுகள் இருக்கவில்லையென்று முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

காலையிலே டெல்அவிவில் விமானத் தாக்குதல் எச்சரிக்கை 'சைரன்' எழுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து மக்கள் நச்சுவாயு தடுப்பு முகமூடிகளைப் போட்டவண்ணம் காற்றுப்புக முடியாத

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஈராக்குடன் ஈரான்?

ஈராக்குக்கு ஆதரவாக போரில் ஈரான் இறங்கவேண்டும் என்று ஈரானின் முக்கிய மதகுருவும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபுல் கஸ்ஸாலி தெஹ்ரான் அரசை நேற்று வற்புறுத்தினர்.

இதே வேளை — ஈராக்குக்கு ஆதரவாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பயிற்சி பெற்ற போராளிகள் போரில் இறங்கக்கூடும் என்று யாசீர் அரபாத்துக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## களத்தில் அல்ஜீரியா!

வளைகுடாப் போரில் ஈராக்குக்கு ஆதரவாக ஈடுபட அல்ஜீரியா தயாராகி வருவதாக ஒரு செய்தி தெரிவித்தது.

நேற்றுத் தலைநகர் அல்ஜியர்ஸில் போரில் ஈராக்குக்கு ஆதரவாக இறங்கும்படி அல்ஜீரிய அரசைக் கோரி ஒரு லட்சத்துக்கு அதிகமானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## பன்னாட்டு படையினர் முயற்சி தோல்வியில்

ஈராக்கின் ஆகாயப் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பன்னாட்டுப் படைகள் எடுத்த முயற்சியை. ஈராக்கிய விமானப்படையின் பலத்த எதிர்த் தாக்குதல் முடங்கச் செய்துவிட்டது.

இதனை அமெரிக்க பென்டகன் அதிகாரிகளே ஒப்புக்கொண்டனர் என்று பி. பி. சி. அறிவித்தது.

## தாக்கியவர்கள் தண்டிக்கப்படுவர்

"ஈராக்கைத் தாக்கியவர்கள் தண்டிக்கப்பட்டாகவேண்டும்" — இவ்வாறு ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் என்பது இப்போது சாத்தியமான காரியமல்ல என்றார் அவர்.

## கெரில்லாத் தாக்குதல்

உலக நாடுகளில் அமெரிக்கா மற்றும் அதன் நேச சக்திகளுக்கு எதிராக கெரில்லாத் தாக்குதல்களை ஆரம்பிக்கும்படி பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தீவிர பிரிவு ஒன்றின் தலைவர் அபுல் அப்பாஸுக்கு பக்தாத் வானொலி நேற்று பகிரங்க வேண்டுகோள் விடுத்தது.

## நீண்ட காலப்போர்

வளைகுடாவில் நீண்டபோர் ஒன்றை நடத்தவேண்டிய நிலை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளுக்கு ஏற்பட்டிருப்பதாகவும்—

அதற்காக தனது நாட்டு மக்களைத் தயார்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி புஷ் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

"கடந்த பத்தாண்டுகளாக ஈராக் தனது இராணுவ வலிமையை கட்டி எழுப்பியிருக்கிறது. அதனை ஓர் இரவில் அழித்துவிடமுடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்" — என்று திரு. புஷ் கூறியிருக்கிறார்.

## முகமூடியுடன் பயணம்

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வார விடுமுறையைக் கழிப்பதற்காக காம்ப்டேவிட் வாசஸ்தலத்துக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதியுடன் சென்ற இரகசிய பாதுகாப்பு அதிகாரிகள் நச்சுவாயுவில் இருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் முகமூடிகளை எடுத்துச் சென்றனர்.

## 40 ஈராக்கியர் பலி?

குவைத்தில் நிலைகொண்டுள்ள ஈராக்கிய படையினரின் ஒரு பிரிவின் மீது பன்னாட்டுப் படையின் போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலின் போது 40 ஈராக்கிய வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று ரோய்ட்டர் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

## செய்தியாளர்களை வெளியேற பணிப்பு

பக்தாத்தில் தங்கியிருந்து போர்முனைச் செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்த 38 மேலை நாட்டு பத்திரிகையாளர்கள், டெலிவிஷன் படப்பிடிப்பாளர்கள் அனைவரையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி ஈராக் அரசு நேற்று உத்தரவிட்டது.

அல்ஜீரியாவும் தனது நாட்டில் இருந்து போர்ச் செய்திகளை அனுப்பி வந்த மேலை நாட்டுச் செய்தியாளர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி நேற்று உத்தரவிட்டது.

## கடலில் கண்ணி!

வளைகுடா கடல்பிரதேசத்தில் கடல் கண்ணிகளை ஈராக் கடற்படை விதைத்து இருப்பதாகவும்—

அவற்றில் சிலவற்றை பன்னாட்டுப் போர்க்கப்பல்கள் அழித்துவிட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

வளைகுடாவினுள் பிரவேசிக்கும் வர்த்தகக் கப்பல்கள் ஏவுகணைத் தாக்குதல் மற்றும் கடற் கண்ணிகளுக்கும் இலக்காகும் ஆபத்து இருப்பதாக அமெரிக்கக் கடற்படை நேற்று எச்சரிக்கை விடுத்தது.

## 7 அமெரிக்க வீரர்கள் காணாமற் போயினர்

இதுவரை அமெரிக்காவின் நான்கு போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் ஏழு வீரர்களைக் காணவில்லை என்றும் அமெரிக்கா நேற்று அறிவித்தது.

ஒரு வீரர் இறந்துவிட்டார் என்று கூறிய பாதுகாப்பு அதிகாரி ஜெனரல் ரொப்செல்லி, ஏனைய ஆறு வீரர்களைத் தேடும்பணி நடைபெறுவதாகவும் சொன்னார்.

அமெரிக்க வீரர்கள் சிலர் சிறைபிடிக்கப்பட்டனர் என்ற செய்தியை அவர் மறுக்கவில்லை.

## 8விமானங்கள் 'அவுட்'

இதுவரை பன்னாட்டுப் படைகளின் எட்டுப் போர் விமானங்களை ஈராக் சுட்டுவீழ்த்தி விட்டதாக அமெரிக்க தரப்பு தெரிவித்தது.

இவற்றில் 4 விமானங்கள் அமெரிக்காவுக்குச் சொந்தமானவை பிரிட்டன் இரண்டு விமானங்களை இழந்தது இத்தாலியும் குவைத்தும் தலா ஒரு விமானத்தை இழந்தன.

ஆனால் மூன்று நாள் போரில் நேற்று வரை 101 எதிரி விமானங்களை ஈராக்கிய படைகள் சுட்டு வீழ்த்தியதாக பக்தாத் அரசு நேற்று அறிவித்தது.

## 181 விமானங்கள் அவசர சுவீகரிப்பு

வளைகுடாவுக்கு ஆயுத உபகரணங்களையும் ஏனைய பொருள்களையும் அனுப்புவதற்குத் தேவையான விமானங்களை வழங்கத் தயாராக இருக்கும்படி அமெரிக்காவில் உள்ள 20 விமான சேவை நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு அமைச்சர் நேற்று உத்தரவிட்டார்.

தனியார் விமான சேவை நிறுவனங்களிடமிருந்து இதற்காக 181 விமானங்களைப் பெறும் உத்தரவையும் பாதுகாப்பு அமைச்சர் நேற்றுப் பிறப்பித்தார்.

## மேலும் துருப்புகள்

அமெரிக்க இராணுவத்துக்கு மேலும் ரிஸர்வ் படையினரைச் சேர்க்க ஜனாதிபதி புஷ் நேற்று பாதுகாப்பு அமைச்சுக்கு அனுமதி வழங்கினார்.

இதே வேளை — வளைகுடாவில் போரிடும் அமெரிக்கப் படையினரின் சேவைக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் உத்தரவையும் ஜனாதிபதி புஷ் நேற்றுப் பிறப்பித்தார்.

## மின்சாரம் துண்டிப்பு

நேற்றுப் பலத்த குண்டுவீச்சுக்கு இலக்கான பக்தாத் நகரில் மின்சாரம், தண்ணீர் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் அனைத்தும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டன என்று பி. பி. சி. வானொலி அறிவித்தது.

## இஸ்ரவேலுக்கு உதவி

எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்து சுட்டு வீழ்த்தும் மாற்று ஏவுகணைகளை ஏவுவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு பட்டரிகளை அமெரிக்கா நேற்று இஸ்ரவேலுக்கு அனுப்பி வைத்தது. அவற்றை எப்படி இயக்குவது என்பதில் இஸ்ரவேலியர்களுக்கு பயிற்சி அளிக்க நிபுணர்களையும் அமெரிக்கா அனுப்பி வைத்தது.

## தாய்லாந்திலும் தாக்கு?

அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் இஸ்ரவேலிய நிலைகளுக்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்தப்படும் அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு நேற்று எச்சரிக்கை விடுத்தது.

## சாவகச்சேரி நகர வர்த்தகரின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஜன 20

வடக்கில் ஏற்பட்டுள்ள யுத்தச் சூழ்நிலை காரணமாக போக்குவரத்துப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி, அனேக வர்த்தகர்கள் கொள்ளை லாபம் பெற்றுவருகின்றனர். தவித்த முயல் அடிக்கும் சூரர்களாகத் திகழ்கின்றார்கள்.

அதே சமயம் வர்த்தகர்களில் சிலர் தமது வாடிக்கையாளர்களுக்கு முடியுமான அளவு பல்வேறு வகையில் உதவியும் வருகின்றனர்.

மிகச் சிலரே நிலையான லாபம் வைத்துப் பொருள்களை விற்பனை செய்கின்றவர்.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தினசரி ஷெல்வீச்சு!

யாழ்ப்பாணம், ஜன. 20

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் பொங்கல் தினத்துக்குப் பின்னர் தினசரி — நாள் தவறாது இரவில் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட ஷெல்கள் நாரந்தனை, புளியங்கூடல் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

[ஓ-5]

## முச்சந்தி முரளி



அப்ப ... மண்ணெண்ணை விற்பனையிலை மக்களுக்கு கண்ணாமூச்சி காட்டுகினம் எண்டு சொல்லுங்கோ... ...!

## கேரதீவு நீரிணையில் காணாமற் போனவர் பலி

பூநகரி, ஜன. 20

கேரதீவு - சங்குப்பிட்டி நீரிணைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தேங்காய் எண்ணெய் பரல்களைக்கட்டி இழுத்து வரும்போது காணாமற்போன இருவரில் ஒருவர் சடலமாக நேற்றுக்காலை 9 மணியளவில் மீட்கப்பட்டார்.

இவரின் சடலம் கௌதாரிமுனைக் கடற்பகுதியில் மீட்கப்பட்டது. பூநகரியைச் சேர்ந்த குணம் (30 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

மற்றவர் கல்முனைக் கடற்பகுதியில் கரை சேர்ந்து, மீனவர்களின் உதவியுடன் கேரதீவு வந்து சேர்ந்தார். [ஓ]

## கப்பல் வந்த பின்பே ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன. 20

கப்பலில் பணம் வந்து சேர்ந்த பின்னரே யாழ். மாவட்டத்திலுள்ள ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் அக்டோபர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் வியாழன்று தபாலில் சேர்க்கப்பட்டன.

கிராமிய வங்கிகளுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் அந்தந்தக் கிராமிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன வங்கிகளுக்குரிய காசோலைகளும் அனுப்பிவைக்கப்பட்டன

இத் தகவல்களை ஓய்வூதியப் பிரிவின் பிரதம கணக்காளர் திரு. சிவபாலன் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, நவம்பர், டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் வந்து சேர்ந்துவிட்டபோதிலும், கட்டுநிதி வந்து சேர்ந்த பின்னரே அவை வழங்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-6)

## மண்ணெண்ணை கணக்கு இதுதான்!

யாழ்ப்பாணம், ஜன. 20

மண்ணெண்ணை என்பதே எங்கும் பேச்சு!—

இவ்வாறு கூறுமளவுக்கு இப்போது வீட்டுக்கு வீடு, சந்திக்குச் சந்தி மண்ணெண்ணை பற்றியும், அதன் ஆகாய விலை பற்றியுமே மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

கடந்த இரண்டு நாட்களாக சந்தையிலிருந்து மாயமாக மறைந்த மண்ணெண்ணை நேற்றுச் சில

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



தாரணியில்:
21-03-1932

தாயிறையில்:
18-01-1991

## திரு. பொன். மகேந்திரன்

(யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர்)

### சூழல் இழந்த சுடர்

எங்கள் சூழலின்
இன்னுயிர் எங்கே?
எங்கே நாங்கள்?
எல்லாம் இருண்டதோ?
"என்ன வந்தாலும்
இருக்கிறது ஒரு துணை!
தன்னைக் கொடுத்தும்
தாங்கும் மீட்டிடும்!"
என்றிருந்தோமே?
இரட்சக! சென்றாய்!
கண்ணீரை எமக்காக்கி
கடவுளடி உனக்காக்கி
புண்ணான நெஞ்சாலே
புரிந்தோம் உன்னடிக்கஞ்சலிகள்!

— சிவலிங்கப்புளியடி வாழ் இளைஞர்கள் —

[15236]

# சக்தி மிகு ஏவுகணை மூலம் தாக்குதல்?

சக்தி மிகுந்த ஏவுகணைகள், நவீன போர் விமானங்கள் ஆகியவற்றைக் கொண்டு ஈராக் மீது வான்தாக்குதல் நடத்த பன்னாட்டுப் படைகள் திட்டமிட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய நவீன விமானங்கள் போரில் ஈடுபடுத்தப்பட்டால் ஈராக் கடும் அழிவைச் சந்திக்க நேரிடும் என்று இராணுவ வல்லுநர்கள் கூறுகின்றனர்.

★ சுட்டு வீழ்த்தப்பட்ட பன்னாட்டுப்படை போர் விமானங்களில் உள்ள வீரர்களை உயிருடன் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 30 ஆயிரம் டொலர் சன்மானம் வழங்கப்படும் என்று ஈராக் நேற்று அறிவித்தது.

★ பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் அமெரிக்கத் தகவல் நிலையம் மற்றும் இஸ்ரவேல் தூதரகம் அருகே குண்டு ஒன்று நேற்று மாலை வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

★ "ஈராக் மீது இஸ்ரவேல் முதலில் தாக்குதலை நடத்தியிருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். இஸ்ரவேல் முதலில் தாக்கப்பட்டிருந்தால், பதில் தாக்குதலை வரையறுக்கப்பட்ட விதத்தில் நடத்த அந்த நாட்டுக்கு உரிமை உண்டு." மேற்கண்டவாறு சிரியாவின் தகவல் அமைச்சர் நேற்றுத் தெரிவித்தார்.

★ உலகில் உள்ள அமெரிக்க நலன்களுக்கு எதிராகவும் அமெரிக்காவின் ஆதரவு சக்திகளுக்கு எதிராகவும் தீவிரமாகச் செயல்படும்படி அரபுக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஜோர்தான் நேற்று வேண்டுகோள் விடுத்தது.

★ கிரீஸ் அரசு 29 ஈராக்கிய ராஜதந்திரிகளை நேற்றுத் தனது நாட்டைவிட்டு வெளியேற்றியது. சைப்பிரஸ் அரசும் நான்கு ஈராக்கிய ராஜதந்திரிகளை வெளியேற்றியது.

★ பன்னாட்டுப் படைகள் 12 ஈராக்கிய படையினரை நேற்று சிறை பிடித்தனர் என்று அறிவிக்கப்பட்டது. வளைகுடா கடலில் அமெரிக்க போர்க்கப்பல் ஒன்றின் மீது ஈராக் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் அப்போதே அவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

# மண்டைதீவு-பண்ணை படகுச் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 20

தீவகப் பகுதி மக்களின் போக்குவரத்து வசதி கருதி மண்டைதீவில் இருந்து பண்ணை சங்கிலிப் பாலம் வரையான புதிய படகுச் சேவை இன்று முதல் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தச் சேவை சீராக நடந்து வரும் பட்சத்தில் தீவகப் பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்கள் பெருமளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-5]

## ஈராக் மீது...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அறைக்குள் நுழைந்துகொண்டனர்.

ஏவுகணைத் தாக்குதல் முடிந்து மூன்று மணித்தியாலம் கழித்து 'அபாயம் நீங்கிவிட்டது' என்று இஸ்ரவேல் அரசு வானொலி மற்றும் டெலிவிஷன் மூலம் அறிவித்தது. அதன்பின்னரே மக்கள் காற்றுப்புக முடியாத அறைகளில் இருந்து வெளியே வந்தனர்.

நேற்று இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதலில் பத்து இஸ்ரவேலர்கள் காயமடைந்தனர்.

பதினொரு ஏவுகணைகள் இஸ்ரவேல் நோக்கி அனுப்பப்பட்ட செய்தியை பக்தாத் வானொலியும் ஊர்ஜிதம் செய்தது.

டெல் அவிவை மூன்று ஏவுகணைகள் தாக்கின.

ஒன்று வங்கிக் கட்டடம் ஒன்றின் அருகில் விழுந்தது.

இரண்டாவது மின்நிலையம் ஒன்றின் அருகில் விழுந்து வெடித்தது.

ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தஞ்சமடைந்திருந்த – காற்றுப் புகமுடியாத – அறைக்கு 20 மீற்றர் தூரத்தில் மூன்றாவது ஏவுகணை விழுந்து வெடித்தது.

சகிப்புத் தன்மையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும்படி இஸ்ரவேலை மீண்டும் அமெரிக்காவும் பிரிட்டனும் நேற்றுக் கேட்டுக்கொண்டன.

ஜனாதிபதி புஷ், நேற்று தொலைபேசிமூலம் இஸ்ரவேல் பிரதமர் ஷாமிருடன் தொடர்புகொண்டு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஆனால் —

இரண்டாவது தடவையாக இஸ்ரவேல் தாக்கப்பட்டிருப்பதால் அது தொடர்ந்து சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்கும் என்பது கேள்விக்குறியே என்று அவதானிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் —

ஈராக்கின் இராணுவ கேந்திர நிலையங்களைத் தாக்கி அழிப்பதில் அமெரிக்கா தவறிவிட்டது என்று இஸ்ரவேல் குற்றம் சுமத்தியிருக்கிறது.

இதேசமயம் —

மூன்றாவது தினமாக நேற்றும் பன்னாட்டு போர் விமானங்கள் ஈராக்கின் இராணுவ நிலைகள் மீது குண்டுகளையும் ஏவுகணைகளையும் வீசித் தாக்கின.

துருக்கி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் உள்ள தளங்களில் இருந்தும் வளைகுடாவில் உள்ள போர்க்கப்பல்களில் இருந்தும் போர் விமானங்கள் புறப்பட்டுச் சென்று இத்தாக்குதல்களை நடத்தின.

(மற்றும் செய்திகள் மூன்றாம் பக்கத்தில்)

## சாவகச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரியில் உள்ள வர்த்தகர் ஒருவரும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து வருகிறார்.

அவரின் நியாய சிந்தைக்கு ஓர் உதாரணம். படித்துப் பாருங்கள்;

சன்லைட் சவர்க்காரம் தற்பொழுது 15 ரூபா முதல் 18 ரூபா வரை விற்கப்படுகிறது. ஆனால் அந்தச் சாவகச்சேரி வர்த்தகரோ ஒரு சன்லைட் சவர்க்காரக்கட்டியைத் தமது பிரதேச வாடிக்கையாளர்களுக்கு 10 ரூபாப்படி விற்பனை செய்கிறார்.

நிவாரணம் பெறுவதற்காக வழங்கப்பட்டுள்ள குடும்பப் பங்கீட்டு அட்டையைக் கொண்டுசென்றால், அதில் ஓர் அடையாளமிட்டு, உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, தமது வாடிக்கையாளர்களுக்கு சவர்க்காரக் கட்டிகளை அவர் வழங்குகின்றார்.

அட்டையில் 5 பேர் உறுப்பினர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், 5 சவர்க்காரக் கட்டிகளை—ஒன்று 10 ரூபாப்படி அவர் விநியோகித்து வருகிறார்.

இந்த வர்த்தகரின் முன்மாதிரியை ஏனைய வர்த்தகர்களும் பின்பற்றினால் பாவனையாளர்கள் எவ்வளவோ ஆறுதல் அடைய வாய்ப்பு உண்டல்லவா? (தி)

## மண்ணெண்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் தலைகாட்டியது. விலையும் சற்றுக் குறைந்திருந்தது.

எனினும் கொழும்பிலிருந்து அதனைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு எவ்வளவு ஆகிறது என்பதை வாசகர்கள் தெரிந்திருப்பது நல்லதல்லவா?

உதயன் செய்தியாளர் பல தரப்புகளிலும் இருந்து திரட்டிய தகவல்களை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்ட கணக்கு விவரம் வருமாறு:-

★ ஒரு லொறியில் 9,200 லீற்றர் மண்ணெண்ணை கொண்டுவர முடியும்.

★ கொழும்பு விலையில் மேற்கூறிய அளவைக் கொள்வனவு செய்வதற்கு 72 ஆயிரம் ரூபா தேவைப்படும்.

★ கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்ப்பதற்கு போக்குவரத்துச் செலவாக சுமார் ஒரு லட்சம் ரூபா தேவை.

★ எனவே ஒரு லொறி மண்ணெண்ணையின் ஆகு செலவு ஒரு லட்சத்து 72 ஆயிரம் ரூபாவாகும்.

★ மொத்த வியாபாரி ஒரு லட்சம் ரூபா லாபம் வைக்க இடமளித்தாலும், ஒரு லொறி (9,200 லீற்றர்) மண்ணெண்ணையின் விற்கும் விலை 2 லட்சத்து 72 ஆயிரம் ரூபாவாகும்.

★ அதாவது ஒரு லீற்றரின் விற்கும் விலை 30 ரூபாவாக இருக்கவேண்டும்.

★ பாவனையாளர்களை வந்தடைவதற்கு முன்னர், பல வியாபாரிகளின் கை மாறி வருவதாகக் கணக்கில் இடம் விட்டாலும், எப்படியும் ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் விலை 35 ரூபாவுக்கு மேல் போவதற்கு எவ்வித காரணமும் இல்லை. (அ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. பொன். மகேந்திரன்

(இளைப்பாறிய உப. அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை திரு. பொன்னம்பலம் மகேந்திரன் அவர்கள் [இளைப்பாறிய உப அதிபர், யாழ். இந்துக்கல்லூரி] 18-1-91 வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம், திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம் (லண்டன்) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் திரு. ரவிராஜ் (லண்டன்), திரு. ரவிசங்கர் (இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), செல்வி உமா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), செல்வன் ரவி கணேசன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சபாபதி கந்தையா (புகையிரதப்பகுதி), திருமதி அன்னம்மா கந்தையா ஆகியோரின் அன்பு மருகரும், திருமதி சரஸ்வதி கதிர்காமத்தம்பி (லண்டன்), திருமதி விமலாதேவி வர்ணகுலசிங்கம் [புருணை], திரு. நடராஜா (லண்டன்), வைத்திய கலாநிதி கந்தசாமி (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. இ. மாணிக்கவாசகர் (சட்டத்தரணி, கொழும்பு), திரு. இ. திருஞானசம்பந்தர் (இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள மேற்பார்வையாளர்), திரு. இ. விசுவநாதன் (சட்டத்தரணி, முன்னாள் மேயர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும், திரு. க. கனகசபாபதி (ஒய்வுபெற்ற லிகிதர்), காலஞ்சென்ற திரு. க. தியாகராசா (நீர்ப்பாசன இலாகா), திருமதி அன்னலட்சுமி இரத்தினசிங்கம், திருமதி இராசலெட்சுமி தங்கராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-01-91 ஞாயிறு காலை 10-00 மணியளவில் 'இராஜமாளிகை' 492, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. ரவிசங்கர்

"இராஜமாளிகை"
492, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (கி/5662)

## திரு. மயில்வாகனம் கணேஸ்

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகக் கொண்டவரும் நெடுந்தீவில் பொது சுகாதார பரிசோதகராக கடமையாற்றியவருமாகிய திரு. மயில்வாகனம் கணேஸ் அவர்கள் 1991-1-10 அன்று 54, இரத்னகாரபிளேஸ், தெகிவளையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13 ஆம் திகதி தெகிவளையில் நடைபெற்றன.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
த நடராஜா

22, இளந்தகுளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [15235]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கி. சரோஜினிதேவி (பூமணி)

திருமதி சரோஜினிதேவி (பூமணி) கிருஷ்ணசாமி 16-01-91 அன்று சிவபதமடைந்தார்.

இவர் புங்குடுதீவு பொன்னாந்தோட்டம் 10ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், இலக்கம் 854, கே. கே. எஸ். வீதியில் வசிப்பிடமாகக் கொண்டவரும், திரு. த. கிருஷ்ணசாமியின் (பிரபல வர்த்தகர் - கொழும்பு) பாசமிகு அன்பு மனைவியும், செல்வன் சிவகுமார் (லண்டன்), செல்வன் ஜீவகுமார் (கனடா), செல்வன் விஜயகுமார் (லண்டன்), செல்வன் ரூபகுமார் [யாழ். இந்துக்கல்லூரி], செல்விகள் நளாயினி, நிலாயினி, சங்கீதா [யாழ். இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கு. ஆறுமுகம், காலஞ்சென்ற பூரணம் தம்பதிகளின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்ற திரு. தம்பிப்பிள்ளை பராசக்தி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திரு. ஆ. துரைச்சாமி (விஜயா ரேடியோ கொம்பனி - கொழும்பு), திரு. ஆ. கனகலிங்கம் [சுகந்தா ரேடர்ஸ் கொழும்பு], திரு. ஆ. விஜயரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. த. தர்மலிங்கம் [இளைப்பாறிய தபாலக உத்தியோகத்தர்], காலஞ்சென்ற திருமதி கப்பையா சிவசாமிப்பிள்ளையின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [20-01-91] காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் இறுதிக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
த. கிருஷ்ணசாமி.

854. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [15237]

## திருமதி விசாலாட்சி நடராசா

நல்லூர், 26 முருகேசர் லேனைச் (நல்லூர் வீடியோ சென்ரர் முன்பாக) சேர்ந்த திருமதி ந. விசாலாட்சி 17-01-1991 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. ச. நடராசாவின் [ஓய்வு பெற்ற லிகிதர், சிறைச்சாலை தலைமைக் காரியாலயம்] அன்பு மனைவியும், ந. தனபாலசிங்கம், ந. இரத்தினராசா [ஓய்வுபெற்ற பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர், திருமலை], திருமதி இ. இந்திராதேவி, ந. மகேந்திரராஜா (உரிமையாளர் மயூரன்ஸ் பீடா, நல்லூர்], ந. ஆனந்தராஜா (முன்னாள் பல்கலைக்கழக விஞ்ஞானபீட தொழில் நுட்பவியலாளர்), ந. சிவானந்தராஜா [பிரான்ஸ்], ந. லோகநாதன் (நீர் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. கிருஷ்ணதயானந்தன் (சந்திரன், நீர்கொழும்பு), திருமதிகள் த. அருணா, இ. அமுதவல்லி [திருமலை], ம. விஜயலட்சுமி, ஆ. பரமேஸ்வரி, சி. சரஸ்வதி [யாழ். போதனா வைத்தியசாலை], லோ. சுபாஷினி (நீர்கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும், த. அரவிந்தன், திருமதி சு. தர்சினி, த. தவாளன், த. அனுஷியா, த. சுபாஷினி, த. சைலாசினி, இ. கிருஷாந்தி, இ. யோகசாந்தி, இ. சிவசாந்தி, ம. மயூரன், ம. அருணன், ம. ஜாழினி, சி. சாமினி, இ. பிரசன்னா, சி. நிஷாந்தினி, லோ. விபூஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், க. பிரேமதாஸின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஈமக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. ஆனந்தராஜா

26, முருகேசர் லேன்,
நல்லூர். [15234]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மலையகத்தில் வேலை நிறுத்தம்

மலையகத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கோரி, வேலை நிறுத்தம் ஒன்றை நடத்துவதற்கு தொழிற்சங்கங்கள் முஸ்தீபு செய்து வருகின்றன. நாளை திங்கட்கிழமை [21ஆம் திகதி] இவ்வேலைநிறுத்தம் நடைபெறும் என்று தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி அறிவித்திருக்கிறது. உத்தேச வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கான உருப்படியான முயற்சி எதிலும் அரசாங்கம் ஈடுபட்டதாக இப்பத்தியை எழுதும் வரை தகவல் இல்லை.

இந்த நாட்டின் வரலாற்றில் தோட்டத் தொழிலாளர்கள் எப்போதும் புறக்கணிக்கப்பட்ட வகுப்பினராகவே இருந்து வருவது வேதனைக்குரியது. பிரிட்டிஷாரின் ஆட்சியில் மட்டுமல்லாது, இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் வந்த அரசுகளாலும் தோட்டத் தொழிலாளர்கள் எல்லாத்துறைகளிலும் ஒதுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், அடக்கி ஆளப்பட்டும் வருகிறார்கள்.

அவர்களின் வாழ்க்கை வசதிகள் பல துறைகளிலும் இன்னமும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றன. பல பிறப்புரிமைகளைக் கூட அனுபவிக்க முடியாதவர்களாக வாழ்கிறார்கள். பிரஜா உரிமை கண்ட தோழிலாளர்களுக்கு கிடைத்த பலனைவிடவும் அவர்கள் ஆண்டான் அடிமை நிலையிலேயே கணிக்கப்பட்டு நடத்தப்படுகிறார்கள்.

ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, வீட்டு வசதி, சுகாதார வசதி என்று வரும்போது அரசாங்கம் அவர்களை மறந்துபோகிறது. அவர்கள் கேட்டாலும் கொடுப்பதில்லை. தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பினால் தான் அரசாங்கப் பணிகள் நடக்கின்றன என்பதை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வுகள் கூட தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. 1984ம் ஆண்டின் பின்னர் இன்னமும் அவர்களுக்கு எவ்வித சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த அநீதியை எதிர்த்து அவர்கள் போராடத் தொடங்கினால், சில சுயநலப் பொம்மைகளை வைத்து அந்தக் குரலை அரசு அடக்கி விடுவது வழக்கமாகிவிட்டது.

அதனால் தான், "தோட்டத் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டில் கடன் வாங்கியா சம்பள உயர்வு வழங்குவது?" என்று பொறுப்புள்ள அமைச்சர்கள் கேட்கிறார்கள்.

நீண்ட காலமாகத் தோட்டங்களில் தொழிற் சங்க நடவடிக்கை மட்டுமல்ல வெடிக்காதது வினைவே அரசின் மெத்தனப் போக்குக்குக் காரணம் என்று கொள்ளவும் இடமுண்டு.

எனவே தமது கோரிக்கை கிடைக்கும் வரை நாளைய வேலை நிறுத்தத்தை தோட்டத் தொழிலாளர்கள் தொடர வேண்டும்.

கருங்காலிகள் இல்லாமல் களைந்து தமது போராட்டத்தை தூய்மையாக நடத்த வேண்டும். அதிலேயே அவர்களின் வெற்றி தங்கி உள்ளது.

# வவுனியா கிராமப் புறங்களில் மலேரியா பரவும் ஆபத்து

## மலத்தியோன் எடுத்துச்செல்ல அனுமதி இல்லையாம்

யாழ்ப்பாணம் ஜன. 20

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள மலேரியா தடுப்பு இயக்க பணிமனையிலிருந்து நகருக்கு வெளியே உள்ள கிராமங்களுக்கு மலத்தியோன் மருந்தை எடுத்துச் செல்ல படையினர் அனுமதிக்கிறார்கள் இல்லையாம்.

வவுனியா மாவட்டத்தில் போதியளவு மலத்தியோன் இருந்தும் மலேரியா நோய் அதிகம் பரவியுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு மலத்தியோனை எடுத்துச் சென்று தெளிக்கமுடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது.

மலேரியா தடுப்பு இயக்க வவுனியாப்பணிமனை காமினி வித்தியாலய இராணுவ முகாமுக்கும், ஜோசப் இராணுவ முகாமுக்கும் இடையில் வைரவப் புளியங்குளத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் மலேரியா நோய் பரவும் விதம் மிக அதிகமாக காணப்படுவதாகவும் —

அந்த மாவட்டங்களுக்குச் சென்று, சில தினங்கள் தங்கி வந்தவர்கள், அங்கு சென்று வந்த பின் நோய்வாய்ப்பட்டவர்கள், உடனடியாக தமக்கு அருகாமையில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் யாழ். சுகாதாரத் திணைக்களத்தின், மலேரியா தடுப்பியக்க தலைமை அதிகாரி எச்சரித்துள்ளார்.

மலேரியா தடுப்பு மருந்து போதியளவு யாழ். ஆஸ்பத்திரிகளில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-6]

### விஞ்ஞான பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். பல்கலைக்கழக 1989ஆம் ஆண்டு விஞ்ஞான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

விஞ்ஞானப்பொதுப் பட்டதாரிப் பரீட்சை, விஞ்ஞான மூன்றாம் பரீட்சை, விஞ்ஞான இரண்டாம் பரீட்சை, விஞ்ஞான மூன்றாம் பொதுப் பட்டதாரி பரீட்சை முடிவுகளே வெளியாகியுள்ளன. (இ-6)

### தீவுப்பகுதிக்கு தபால் பொதிகள்

புங்குடுதீவு ஜன. 20

"குமண" கப்பலில் தீவுப் பகுதிகளுக்கு பத்து தபால் பொதிகள் வந்துள்ளன.

புங்குடுதீவு, அனலை தீவு, நெடுந்தீவு ஆகியவற்றுக்கு தலா மூன்று பொதிகளும் நயினா தீவுக்கு ஒரு பொதியும் இவற்றுள் அடங்கும். (சி-131)

### புங்குடுதீவில் மீன்பிடி பாதிப்பு

புங்குடுதீவுப் பகுதியில் மீன்பிடித் தொழில் கடந்த சில நாட்களாக பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றது.

நயினாதீவு கடற்படையினரின் அதிதீவிர ரோந்து நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும்.

இரவு நேரங்களில் காணப்படும் மீன்பிடிப் படகுகளை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர்.

ஒருவார காலத்தில் மூன்று தடவைகள் இப்படியான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (இ-131)

### கட்டுப்பாட்டு விலையில் மாணவருக்கு உணவு

யாழ்ப்பாணம் ஜன 20

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் உணவு வழங்குவதற்கு ஏதுவாக அங்குள்ள உணவகங்களுக்குத் தேவையான உலர் உணவு வகைகளை நியாய விலையில் பெற்றுத்தர யாழ். அரச அதிபர் உடன்பட்டுள்ளார்

யாழ் பல்கலைக்கழக "கிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக உணவகங்கள் மூலம் மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வர இருப்பதாகவும் —

இது பல்கலைக்கழக மாணவர்களுக்கு பேருதவியாக அமையும் என்றும் அவர் மேலும் சொன்னார் [இ-6]

### பிறப்பு-இறப்பு பதிவு மீண்டும் போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் ஜன. 20

பிறப்பு, இறப்புப் பதிவுக் காரியாலயம், யாழ் போதனா வைத்தியசாலையில் மீள இயங்க ஆரம்பித்துள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் 16ஆம் இலக்க அறையில் இப்பிரிவு கடந்த செவ்வாய் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ். போதனாவைத்திய சாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை இங்கே பெற்றுக் கொள்ளலாம் என பதிவு உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### போலியோ தடுப்பூசி மருந்து இன்றி குழந்தைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஜன. 20

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு மாத காலமாக வழங்கப்பட்டு வந்த குழந்தைகளுக்கான போலியோ தடுப்பூசி மருந்து கடந்த செவ்வாயுடன் முடிவடைந்து விட்டது.

இதனால் தடுப்பூசி போட குழந்தைகளுடன் வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

போலியோ நோய் தடுப்பூசி மருந்துத்தேவை குறித்து மேலிடத்துடன் வைத்தியசாலை தொடர்பு கொண்டுள்ளதாகவும் கிடைத்ததும் இது குறித்து நோயாளருக்கு தெரிவிக்கப்படுமெனவும், போதனாவைத்தியசாலை குடும்ப நல பிரிவு உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது. [இ-15]

### எமது சுகாதாரத்தை நாமே திட்டமிட வேண்டும்

#### நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 20

எமது தமிழ்ப் பகுதிகளில் ஆரம்ப சுகாதாரம் இன்னமும் விரிவுபடுத்தப்படவில்லை. எனவே தமிழ்ப்பகுதிகளில் எமது சுகாதாரத்தை நாமே திட்டமிட வேண்டும். இதற்கு பேராசிரியர் த. இராமதாஸ் எழுதிய "ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி" எனும் இந்த நூல் பயன்பட வேண்டும்.

யாழ். போதனா ஆஸ்பத்திரி, மருத்துவ மாணவர் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற பேராசிரியர் த. இராமதாஸின் ஆரம்ப சுகாதார வழிகாட்டி நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் அ. தெய்வேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் தெய்வேந்திரன் மேலும் பேசுகையில் இன்றைய யுத்த நிலையால் மேலும் கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத் தாக்கங்கள் ஒரு புறம் இருக்க, தெருப்புக்காய்ச்சல், விசர்நாய்க்கடி போன்ற பல நோய்கள் வழமையாகி விட்டன.

இவற்றை தடுக்க உதவும் வகையில், பேராசிரியரின் நூல் அமைந்துள்ளது என்றார்.

ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப் பிரிவு, ஆராய்ச்சி அலுவலர் செல்வி கலாவதி இரத்தினராஜா கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

நூலின் முதல் பிரதியை யாழ் போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம், ஐக்கிய இராச்சியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதிய சுகாதார இணைப்பாளர் செல்வி மேரியன் பேர்ச்சிடம் வழங்கினார்.

நிறைவில் ... ந. இனியன் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

### உச்சி மாநாடு திட்டமிட்டபடி

வாஷிங்டன், ஜன. 20

திட்டமிட்டபடி புஷ்-கோர்பச்சேவ் உச்சிமாநாடு நடைபெறும் என்று வெள்ளை மாளிகை நேற்று அறிவித்தது.

அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை இம் மாநாடு ஜெனிவாவில் இடம் பெறும்.

லித்துவேனிய தகராறு காரணமாக ஜனாதிபதி கோர்பச்சேவுடனான உச்சி மாநாட்டை ஜனாதிபதி புஷ் ரத்துச் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. [இ-எ]

### யுத்தம் பல வாரங்கள் தொடரும் என்கிறார் புஷ்

வாஷிங்டன், ஜன. 20

வளைகுடாப்போர் பல வாரங்கள் தொடரும் என்று ஜனாதிபதி ஜேர்ஜ் புஷ் நேற்று அறிவித்தார்.

போரின் இரண்டாவது நாள் முடிவில் ஜனாதிபதி புஷ் நேற்று வெள்ளைமாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்

அப்போது இதனை அவர் வெளியிட்டார்.

விரைவில் யுத்தம் முடிந்து விடும் என்று மக்கள் அதீத நம்பிக்கை கொள்ளக்கூடாது என்றும் திரு. புஷ் சொன்னார்.

இது வரை எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. (So far so good). யதார்த்தபூர்வமாக நாம் சிந்திக்க வேண்டும். இழப்புக்கள் வரும்; ஏமாற்றங்கள் ஏற்படலாம் நாம் தளர்ந்து விடக் கூடாது

"ஈராக் மீதான வான் பிராந்தியம் பன்னாட்டுப்படைகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இன்னும் கொண்டு வரப்படவில்லை அதற்கான போர் தீவிரமாக்கப்பட்டுள்ளது" என்றும் திரு. புஷ் சொன்னார்.

போரின் திசையை திருப்பிவிட சதாம் ஹுசேன் முயற்சிக்கிறார் ஆனால் அம் முயற்சி வெற்றி பெறாது என்றும் புஷ் நம்பிக்கை வெளியிட்டார்.

பன்னாட்டுப்படைகளின் ஒற்றுமையைச் சிதறடிக்கும் முயற்சியில் சதாம் ஹுசேன் தோல்வி காணுவார் என்று கூறிய ஜனாதிபதி புஷ் "ஈராக் மீது பதில் தாக்குதல் நடத்தாததிற்காக இஸ்ரவேலின் சகிப்புத்தன்மையைப் பாராட்டுகின்றேன்" என்றும் சொன்னார்

அதேசமயம் வளைகுடாப்போரின் முதல் கட்டமான வான்தாக்குதல்கள் வாரக்கணக்கில் அல்ல, மாதக்கணக்கில் இடம் பெறும் நிலைதான் ஏற்பட்டு உள்ளது என்று அமெரிக்க நாடாளுமன்றத் தலைவர்களிடம் அமெரிக்க 'பெண்டகன்' அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். (இ-எ)

### எண்ணெய் விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டது

லண்டன்; ஜன 2

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று மேலும் வீழ்ச்சி அடைந்தது. ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 18 $ டொலராக விற்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் திகதி குவைத்தை ஈராக் பிடித்த பின்னர் மசகு எண்ணெயின் விலை இந்த அளவுக்கு வீழ்ச்சி அடையவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இது பொருளாதார நிபுணர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது

எண்ணெய் விலை மேலும் வீழ்ச்சியடையும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக பி.பி.சி வானொலி அறிவித்தது. சவுதி அரேபியாவின் முன்னாள் எண்ணெய் வளத்துறை அமைச்சர் கருத்து வெளியிடுகையில், ஒரு பீபா 15 டொலர் வரை வீழ்ச்சி அடையும் சாத்தியம் இருப்பதாக பி.பி.சி வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

யுத்தம் வெடித்தவுடன், எண்ணெய் விலை அதிகரிக்கும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். அதற்கு மாறாக விலை வீழ்ச்சி ஏற்பட்டது அதிர்ச்சி தருவதாக உள்ளதாகவும் அவர் சொன்னார்.

ஈராக், குவைத் நாடுகளின் எண்ணெய் உற்பத்தி தடைப்பட்டிருந்தும் எண்ணெய் விலை வீழ்ச்சியில் மாற்றம் ஏற்படாது என்றும் - யுத்தம் நின்று ஈராக், குவைத் நாடுகளின் எண்ணெய் உற்பத்தி ஆரம்பமான பின்னர் எண்ணெய் விலையில் மேலும் வீழ்ச்சி காணப்படும் என்றும் சவுதி அரேபியாவின் முன்னாள் அமைச்சர் சொன்னார்.

### அழிவிலிருந்து ஈராக்கியரை காப்பாற்றக் கோரிக்கை

குவைத்தில் இருந்து படைகளை விலக்கி ஈராக் மக்களை பேரழிவில் இருந்து காப்பாற்றும்படி ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ், ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு தனிப்பட்ட வேண்டுகோள் ஒன்றை விடுத்து உள்ளார்.

கோர்பச்சேவின் வேண்டுகோள் அடங்கிய கடிதம், பக்தாத்தில் உள்ள சோவியத்தூதர் வொரன்ஷோவ் மூலம் ஜனாதிபதி சதாம் ஹுசேனிடம் வார இறுதியில் ஒப்படைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

### தொலைபேசியில் தொடர்பு

ஜனாதிபதி புஷ், ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் நேற்று நீண்ட நேரம் தொலைபேசியில் பேசினார். வளைகுடாப்போர் திட்டமிட்டபடி நடத்தப்படுவதாகக் கூறிய திரு. புஷ், பல வாரங்களுக்கு போர் நீடிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதையும் திரு. கோர்பச்சேவுக்கு அப்போது தெரியப்படுத்தினார்.

### 24 மணி நேரமும் குண்டுவீச்சு

ஈராக்கின் தெற்குப் பகுதியில் நிலை கொண்டுள்ள ஈராக் குடியரசுப்படையினர் மீது தினமும் 24 மணித்தியாலங்களும் குண்டுவீச்சு நடத்தப்படுகிறது.

இத்தகவலை பெண்டகன் அதிகாரிகள் நேற்று அமெரிக்க நாடாளுமன்றத் தலைவர்களிடம் தெரிவித்தனர்.

### பதிலடி கொடுக்கப்படும் என்கிறது இஸ்ரவேல்

ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷி ஆரென் நேற்று தெரிவித்தார்

எப்போது, எப்படி பதிலடி இடம் பெறும் என்பதை அவர் டெலிவிஷனில் பேசுகையில் வெளியிடவில்லை.

"நாம் தாக்கப்பட்டுள்ளோம். பதிலடியை நாம் கொடுத்தே ஆக வேண்டும்" என்று மட்டும் அவர் சொன்னார்.

பதிலடித் தாக்குதலை இஸ்ரவேல் நடத்தாத பட்சத்தில், அதன் 25 ஆண்டு கால வரலாற்றில் இதுவே முதல் தடவையாக பதிலடி நடத்தாததாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நெடுங்குளம் வீதியில் காணி வருமானத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யோகநாதன் இந்திராதேவி 202/6, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். [15552]

## எரு விற்பனை

இரண்டு லொறி நிறைவு கொள்ளக் கூடிய எரு கூறு விலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் 1991 - 01 - 31 க்கு முன், எருவை பார்வையிட்டு தம்மால் கொடுக்கக்கூடிய கூறு விலையை காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், சலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/5656]

## கல்வி

G. C. E. (O/L), புலமைப் பரிசில் வகுப்புக்களுக்குரிய கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு குறைந்த காலத்தில் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு 11 வரைக்கும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களைக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10½ கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (15555)

## ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகிறது. Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக) [இ/5664]

## மணமகன் தேவை

யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் அரசாங்க திணைக்களத்தில Staff officer ஆகக் கொழும்பில் பணிபுரியும் Professionl Qualific-ation உள்ள ரூபா 5000/-க்கு மேல் வேதனம் பெறும் 30 வயது பெண்ணுக்கு மணமகன் தேடுகிறார்கள். சகல விபரங்களோடு சாதகக்குறிப்புடன் விண்ணப்பிக்கவும். தகுதிக்கேற்ற சீதனம் வழங்கப்படும். 173, C/O உதயன். [15549

## இரசாயனவியல் நூல்கள்

A. மகாதேவா ஆசிரியரின் அசேதன இரசாயனம், பௌதிக இரசாயனம், புவியியல் ஆகிய நூல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பொண்ட் கல்வி நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சுப்பிரமணியம் புத்தகசாலை சிவலிங்கப் புளியடி யாழ்ப்பாணம். (15551)

## வகுப்புக்கள்

Steno (English) Home Science Diploma வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன; சேர விரும்புவோர் எதிர் வரும் சனிக்கிழமைக்கு முன் (19 - 01 - 90) எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும். அத்துடன் G. S. Q. (Bio) வகுப்புக்கள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதிபர் உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (15545)

## நாய்குட்டி விற்பனைக்கு

ஏழு வாரங்கள் நிரம்பிய பால் மறந்த பூச்சியகற்றிய அழகிய வெள்ளை பொமனேரியன் ஆண் நாய்குட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: கு. ராஜ்குமார் மாவடிச்சந்திக்கு அண்மையில், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [15561]

## WANTED

1. Work available for elderly lady experienced in English Typing 2. Spacious annexe available for elderly family. 3. Hostel facilities available for students. Contact B J. Peter (Sworn Translator) No. 11, Somasundaram Avenue, Chundikuli, Jaffna, on Sundays. [15554]

Teacher for Shorthand and Typing in Jaffna. Apply before 25th. C/o. Uthayan, Jaffna. [15559]

## தேவை

வாடகைக்கோ அல்லது விலைக்கோ எமக்கு உடனடியாக 8KU, 4KU ஜெனறேற்றர் (Generator) தேவை. மண்ணெண்ணெய் அல்லது டீசலில் இயங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். பொ. சீலன் 250 A பருத்தித்துறை வீதி, (நல்லூர் ஆலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (15547)

## நூல் வெளியீடு

சுழிபுரம், ஜன. 20

"வச்சிர பஞ்சர கவசம் உரைதந்த அத்தியாயம்" நூல் வெளியீட்டு விழா தொல்புரம் கிழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் இன்று ஞாயிறுக் கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

இளைப்பாறிய கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம் நூல வெளியீட்டை ஆரம்பித்து வைப்பார்.

வடமாநில சங்கீத கல்வி அதிகாரிக. கணபதிப்பிள்ளை, சங்கீதபூஷணம் வ. உருத்திரன, திரு. ந. சிவசண்முகமூர்த்தி நூல பாடல்களை ஓதுவார்கள் நூலை நெறிப்படுத்திய இலக்கணவித்தகர் திரு. இ. நமசிவாய தேசிகர் கௌரவிக்கப்படுவார். (இ-28)

# அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவரும், நீண்ட கால ஆசிரியரும், அண்மையில் ஓய்வு பெற்ற பிரதி அதிபருமாகிய,

## பொன். மகேந்திரன்

அவர்களின்

திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்; அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம், 20-01-91 [சி-5668]

# பதவி வெற்றிடம்

## வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### 1. கணக்குப் பதிவாளர்:

சம்பளத்திட்டம்–
855 - 1385 / 30 தர 07 - 40 தர 8 — சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்

கல்வித் தகைமைகள்

கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் குறைந்தது இரண்டு வருட கணக்குப் பதிவாளர் அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் 4 வருட கணக்கு அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர் தரத்துடன் க. பொ. த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி.

அல்லது

கணக்குப் பதிவியலில் லண்டன் இன்ரமீடியற் பரீட்சைச் சித்தி;

வயது:- 23 — 40

பிணை:- ரொக்கம் ரூபா 2000/-(இரண்டாயிரம்)

### 2. கிளை மேற்பார்வையாளர்

சம்பளத் திட்டம்:
805 - 1260 / 25 தர 7 - 35 தர 8 — சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்.

கல்வித்தகைமைகள்–

கூட்டுறவும் பணியாளரின் 12 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டு வருட மேற்பார்வையாளர் அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளரின் 13 ஆவது சம்பளத் திட்டத்தில் 04 வருட மேற்பார்வையாளர் அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் கல்வித்தராதரப்பத்திரம் (சாதாரணம்) அல்லது க. பொ. த. சாதாரணம் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி அதில் 4 பாடங்களில் திறமைச்சித்தி இதில தமிழ்ப்பாசை, கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் ஆகியன அடங்கியிருத்தல் வேண்டும். அத்துடன் 02 வருட மேற்பார்வை அனுபவம்.

வயது:- 22 — 35

பிணை:- ரூபா 2000/- ரொக்கம்.

சங்கத தொழிற்பரப்பில் வசிப்பவர்கட்கு முன்னுரிமையளிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 29 . 01 . 1991

(இ/5666) –பொதுமுகாமையாளர்

ஓம்
சிவமயம்

# ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் தைத் திங்கள் 13ஆம் நாள் (26 - 01 - 91) சனிக்கிழமை காலை 6 மணி 36 நிமிடம் முதல் 7 மணி 39 நிமிடம் வரையுள்ள மகர லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **செல்வகுமார்** அவர்களுக்கும் | எனது ஏக புத்திரி திருநிறை செல்வி **குணரஞ்சனி** அவர்களுக்கும் |
|---|---|

திருவருள் துணையால் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் திருகோணமலை வில்லூன்றி கந்தசாமி கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து எலிபன்ட் கவுஸில (Elephant House) நடைபெறவிருக்கும் மதிய போசன விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறும் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி பா. மாணிக்கசபாபதி
இல. 82, பேராலய வீதி,
திருகோணமலை.

திரு. எஸ். சிவானந்தன்
இல. 1, திருமலை மாடி,
[illegible] வீதி,
திருகோணமலை.

(15537)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பொன். மகேந்திரன்

எமது கழகத்தின் உப தலைவராக இருந்து கழகத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த பிரபல விளையாட்டுத்துறை வல்லுநர் அமரர் பொன். மகேந்திரன் அவர்களுக்கு

● எமது இதய அஞ்சலிகள் ●

அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்
(சி/5670)

# கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in BASIC LANGUAGE

ஆரம்பம்: 25 - 01 - 1991 10.30 a.m.
(திங்கள். புதன், வெள்ளி வகுப்புக்கள்)
27 - 01 - 1991 10.30 a.m.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும்.

கட்டணம் பகுதி பகுதியாகச் செலுத்தலாம்

சேரும் போது செலுத்தவேண்டியது 500/- மட்டுமே.

மேலதிக விபரங்கட்கு:-




## UNIKCO
### Computer Centre
37, Clock Tower Road,
JAFFNA,
(வெலிங்டன் சந்திக்கு வடக்கே உள்ள மேல்மாடி)
(சி-5655)

## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

# எரிபொருள் விநியோக கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் அளவு எரிபொருள் கொள்கலனில் விநியோகிப்பதற்கு தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1. சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்.
2. SAE 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்.
3. மண்ணெண்ணெய் வாராந்தம் 200லீற்றர் அல்லது மொத்தம் 2000 லீற்றர்.

வாராந்தக் கூறுவிலைகள் 30-04-1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது. ஆனால் கூறுநர்கள் விரும்பினால் எந்தக் கால எல்லை வரை இந்த கூறு விலைகள் ஏற்புடையன எனக்குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

கூறு விலைகள் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக ரூ 5000/- பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டுடன், 28-01-91 காலை 10.00 மணிக்கு முன் பல்கலைக்கழக பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானதாகும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1991 01-18. [சி-5663]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-1-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org